Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 350

சனிக்கிழமை 11 நவம்பர் 2023

ஐப்பசி 25 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054

## 2024 முற்பகுதியில் பொதுத்தேர்தல்?

கொழும்பு, நவம்பர் 11

2024 ஆம்ஆண்டு முற்பகுதிக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் பிரகாசமாகத் தென்படுவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

»11

## தீபாவளிக்கு திங்களன்று பாடசாலை விடுமுறை!

கொழும்பு, நவ. 11

தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை நாடு முழுவதும்

»11

பாரதூரமான அரசியல் தலையீடு

## இலங்கை கிரிக்கெட்டுக்கு தடை விதித்தது ஐ.சி.சி.

கொழும்பு, நவ. 11

இலங்கை கிரிக்கெட் சபைக்குள் இருக்கும் அதீத அரசியல் தலையீடுகள் காரணமாக, இலங்கை கிரிக்கெட் சபையின் உறுப்புரிமையை தற்காலிகமாக நீக்கியது சர்வதேச கிரிக்கெட் சபை.

இலங்கைக்கிரிக்கெட்டுக்குள் நிலவும் அரசியல் தலையீடுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடந்த இரு

»11

## கோப் விசாரணைக்கு இலங்கை கிரிக்கெட்

கொழும்பு, நவ. 11

இலங்கை கிரிக்கெட் சபை, கோப் குழுவின் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை கோப் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

»11

## இலங்கைக் கிரிக்கெட் தனிச் சிங்கள அணி!

நாடாளுமன்றத்தில் நேற்று வினோ எம்.பி. கடும்பிடி

கொழும்பு, நவ. 11

இலங்கை கிரிக்கெட்டுக்குள் இனப்பாகுபாடு காட்டப்படுகிறது. இது கிரிக்கெட் அணியல்ல. இது ஒரு சிங்கள அணி என்ற நிலையே உள்ளது. இந்தநிலைமை மாற்றப்பட்டு இலங்கை கிரிக்கெட் அணிக்குள் சகல இனங்களும் உள்

»11

பாக். தூதுவர் கொலைமுயற்சி;

## அரசியல்கைதிகள் மூவர் நீதிமன்றத்தால் விடுதலை



கொழும்பு, நவ. 11

2006ஆம் ஆண்டு இலங்கைக்கான பாகிஸ்தானின் தூதுவரைக் கொல்வதற்கு சதிமுயற்சியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து சுமார் 15 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அரசியல்கைதிகள் மூவர், அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

»11

## சதித் திட்டங்களாலே போட்டியில் தோல்வி!

இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி அடைந்த தோல்விகளுக்கு, மைதானத்துக்கு வெளியில் இருந்த சதித்திட்டங்களே காரணம் என்று இலங்கை கிரிக்கெட் அணியின்

»11

அத்துமீறும் இந்திய மீனவருக்கு எதிராக

## யாழ். மாவட்டச் செயலகத்தை முடக்கி நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 11

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை எந்தச் சமரசமும் இல்லாமல் கைதுசெய்யவேண்டும் என்றும், அவர்களுக்கு எதிராகக் கடுமையான வகை

»11

## சிறுமியுடன் குடித்தனம் இளைஞரொருவர் கைது

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, நவ. 11

புத்தளத்தைச் சேர்ந்த சிறுமியொருவரைக் காணவில்லை என்று முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், அவருடன் குடும்பமாக இருந்த குற்றச்சாட்டில் வவுனியா இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

»11

## இலங்கைக்கு உலக வங்கியால் 150 மில். டொலர்

விரிவு:- பக்.11

## மின்வேலியால் இளைஞன் பலி!

வவுனியா, நவ. 11

விலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்தத் துயரச்

»11

பூநகரி - பொன்னாவெளியில்

## சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக 100 ஆவது நாளாக போராட்டம்!

கிளிநொச்சி, நவ. 11

கிளிநொச்சி - பொன்னாவெளிப் பகுதியில் இடம்பெறுவரும் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக நூற்றுக் கணக்கான மக்கள் இணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக அங்கு

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ... தமிழ் நாளிதழ்

## சிற்றூழியர் நியமனத்தில் புறக்கணிப்பு ஊழியர்சங்கம் பகிரங்கக் குற்றச்சாட்டு!

வவுனியா, நவ. 11

வவுனியா பல்கலைக்கழகத்தின் சிற்றூழியர் பதவிகளில் அதேமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் நிலையில் அவர்களுக்கு நியமனத்தை வழங்காமல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட புதிய பட்டியலுக்கமைய நியமனங்களை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே கடமையாற்றிய ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தருக்கு ஊழியர் சங்கத்தால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதுவரை காலமும் சிற்றூழியர் தரத்திலான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் அந்தப் பல்கலைக்கழக பேரவையின் அனுமதியுடனேயே நடத்தப்படுவது வழமை. எனினும் தற்பொழுது மட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இந்த விடயம் தொடர்பில் அவசரமாகத் தலையீடு செய்வதன் அவசியம் என்னவென்று புரியவில்லை. பல்கலைக்கழகங்களில் ஆள்சேர்ப்பு நடவடிக்கையின்போது அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்பது சகல பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கொள்கையாக உள்ளது. தொழிற்சங்கக் கூட்டுக்குழுவால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களிலும் இதுவொரு முக்கியமான கோரிக்கையாகக் காணப்படுகின்றது. அவ்வாறிருக்கையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவால் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைவாய்ப்பிலிருந்து பெயர் பட்டியலை தயாரித்து பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவது அரசியல் நியமனமாகாதா? எனவே மேற்குறிப்பிட்ட ஆள்சேர்ப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வவுனியாப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-110)

# உணவுப் பணவீக்கம் 2024 இல் குறையும்!



## உணவுப் பாதுகாப்பு அமைச்சர் ஆருடம்

கொழும்பு, நவ. 11

**முன்வைக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்துடன் நாட்டின் உணவுப் பாதுகாப்பு குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய உணவுப் பணவீக்கத்தை அடுத்த வருடத்தில் குறைக்கமுடியும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.


அவர் மேலும் குறிப்பிடுகையில்;

நாம் நாட்டின் உணவு விலை மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தி பொருளாதார மேம்பாட்டுக்காக பிரதான வருமான வழியான வரி வருமானத்தை அதிகரித்துள்ளோம்.

அதனை நிவர்த்திக்கும் வகையிலும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். உதாரணமாக பால் உற்பத்தியில் நேரடியான நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படும் பாலுக்கு மேலதிகமாக பால் சார்ந்த உற்பத்திக்காகவும் பால் பயன்படுத்தப்படுகின்றது. பால் விலை அதிகரிப்பால் இதுபோன்ற தொழில் முயற்சியாளர்கள் உற்பத்திகளில் இருந்து விலகிக்கொள்கின்றனர். அதன் காரணமாக நாட்டின் தேவைக்காக நாம் பால் சார் உற்பத்திகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கின்றோம்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி, அந்த உற்பத்திகளில் நாட்டினுள் விநியோகிக்க எதிர்பார்க்கும் அளவு, அடுத்த வருடத்தில் அவற்றின் விலைகள் தொடர்பில் எமக்கு அறிக்கையளிக்குமாறு நாம் அமைச்சுகளுக்கு அறிவித்துள்ளோம்.

அந்தவகையில் அடுத்த ஆண்டில் நாட்டிலுள்ள அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பு, அதன் விலைகள் குறித்தும் நுகர்வோருக்கு உத்தரவாதம் வழங்கி, அவற்றின் விலைகளைக் குறைக்க முடிவதுடன், உணவுப் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (ச-44)



## தேசியமட்டத்தில் சாதித்த நாடகக்குழு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நாடகக் குழுவினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் திரு.பிரட்லீ பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம், முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ந.கிருபாகரன், நாடகத்துறை ஆசிரிய ஆலோசகர் மற்றும் நாடகத்தின் வெற்றிக்காக அர்ப்பணித்த துறைசார் வல்லுநர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-27)



## கந்தசஷ்டி விரத பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், நவ. 11

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்ட ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத பூசை வழிபாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## வல்வெட்டித்துறையில் பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.11

வடமராட்சி பிரதேசத்தின் மாபெரும் பண்பாட்டு பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையில் சிறப்புற இடம்பெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் நிதி அனுசரணையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் வடமராட்சி வடக்கு கலாசார பேரவையும் கலாசார அதிகாரசபையும் இணைந்து பண்பாட்டுப் பெருவிழாவை நடத்தின.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் , சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம், மூத்த கலைஞர் கலாபூஷணம் யோ. இருதயராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

விருந்தினர் வரவேற்பைத் தொடர்ந்து புலோலி கிருஸ்ணாகரன் குழுவினரது 'பல்லியம்' , நெடியகாடு பரதசுரபி கலாமன்ற மாணவியர்களின் பரத நாட்டியம், நெல்லண்டை அறநெறி பாடசாலை மாணவர்களது வில்லுப்பாட்டு, வல்வை ஆதிசக்தி கலாமன்ற குழுவினரது சிந்து நடைக்கூத்து உள்ளிட்ட ஆற்றுகைகள் இடம்பெற்றன. அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கு பிரதேச கலாசார பேரவையின் 'கலைப்பரிதி', 'இளங்கலைஞர்' மற்றும் கலாசார அதிகாரசபையின் 'கலைக்கலசம்', 'கலைத்தளிர்' உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம்பொருள் ஏற்றுமதி

# ரூ. 78 மில்லியன் ஈட்டம்!

கொழும்பு, நவ. 11

இந்த வருடத்தின் ஒக்ரோபர்மாதம் வரையான காலப்பகுதியில் பனம் பொருளின் ஏற்றுமதியில் 78 மில்லியன் ரூபா வருமானம் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் பனை வெல்லம், தேன் உள்ளிட்ட உற்பத்திகளுக்கு அதிக கேள்வி நிலவுகிறது.

அதற்கமைய நாட்டில் பனை தொடர்பான உணவு கைத் தொழில் மற்றும் வீட்டு உப யோகப்பொருள்கள் உற் பத்திகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தைதயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதி காரிகளுக்கு பணிப்புரை விடுக் கப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## வவுனியா மாவட்டத்தில் 51அதிபர்கள் நியமனம்

வவுனியா, நவ. 11

வவுனியா மாவட்டத்தில் நிலவிவந்த அதிபர் வெற்றிடங்களுக்கு 51 பேர் நியமிக்கப்பட் டுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்துக்கு 44 அதிபர் களும் வடக்கு வலயத்தில் 7 அதிபர்களு மாக 51அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தத்தமது வலயக் கல்விப் பணி மனைகளில் நடைபெறும் பயிற்சிப்பட் டறையின் பின் பதவியேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-75)

## கசிப்பு காய்ச்சுமிடம் மக்களால் முற்றுகை

கிளிநொச்சி, நவ. 11

பெரியகுளம் காட்டுப் பகுதிக்குள் இயங்கிய கசிப்பு காய்ச்சும் இடம் மக்களால் நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டது. பின்னர் தர்மபுரம் பொலிஸாரால், கசிப்பு மற்றும் கோடாக்கள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன.

கசிப்பை காய்ச்சுவதற்காக ஆறு பரலகளில் கோடா குளத்தின் நடுப்பகுதி யில் தண்ணீருக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை பொலி ஸார் மீட்டனர். (ஒ-113)

## கடலட்டைப் பண்ணை அதிகளவில் இலாபம்

கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கச் செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவ. 11

பாரம்பரிய கடற்றொ ழில் செய்பவர் களுக்கு பாதிப்பு ஏற்படாத வகை யில் கடலட்டைப் பண்ணைக்கு அனு மதி வழங்கு கடற்றொ ழில் அமைச்சர்நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த. மகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் கிராஞ்சிப் பகுதியில் கடலட்டைப் பண்ணைக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களில் சிலர் தவறை உணர்ந்து கடலட்டைப் பண்ணைக்கு விண் ணப்பித்துள்ளனர். கடலட்டைப்பண்ணையிட் டவர்களுக்கு அதிகளவு லாபம் கிடைத்துள்ளது. தற்போது பலரும் கடலட்டைப் பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர். பாரம்பரிய கடற் றொழில் செய்பவர்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி வழங்கவேண்டும்.

அதேவேளை இந்திய மீனவர்கள் எமது கடற் பரப்புக்குள் வந்து தொழில் செய்வதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார். (ச-20-27)

# பாசிச செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரசு

## பல்கலை ஊழியர் சங்கம் கண்டனம்

நியாயத்துக்காகவும், உரிமைக்கா கவும் போராடுபவர்களையும் சமூ கச் செயற்பாட்டாளர்களையும், தொழிற்சங்கவாதிகளையும், மக் களையும் பாசிச செயற்பாடுகளின் மூலம், அரசாங்கம் அடக்கி ஒடுக்கி அடிபணியவைக்கும் செயற்பாடு களை முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிள வுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற் பட வேண்டியது அவசியமாகும் - இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு அனுப்பியுள்ள அறிக்கையில்:

பேரினவாத அரசாங்கத்தின் துணையோடு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை கள், அவர்களது மரபுரீதியான வாழிடங்கள் மீதான ஆக்கிரமிப்பு கள், மொழி, கலாசார அழிப்புகள் என்பவற்றின் வாயிலாக தமிழ்மக் கள் இனவழிப்பு செய்யப்பட்ட போது அவற்றுக்கு எதிராக போராடி தம் வாழ்வையே அர்ப் பணித்து தமிழர்களைக் காத்து நின்ற உத்தமர்களை 'பாசிசவாதி கள்' என்று எவரும் கூறவும் முடி யாது, அதனைத் தமிழர்கள் யாரும் ஏற்கவும் மாட்டார்கள் என் பதைக் கூறுகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களா லும் ஏனையோராலும் தமிழ்த் தேசியம் சார்ந்து ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் அனைத்துச்செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவு உண்டு என்பதோடு அந்தச்செயற்பாடுகளில் அவர் களுடன் இணைந்து நிற்போம் என்வும் தெரிவித்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஓ-இ)

## புதினம் தெரியுமோ?

ரஜினிகாந்த் நடிச்ச '2.0' எண்ட படத்தை அநேகமா எல்லாரும் பாத்திருப்பியள். அதில சும்மா றோட்டாலை ஒராள் போன் கதைச்சுக் கொண்டு போகேக்க, திடீரெண்டு அந்தப் போன் அவையின்ர கையைவிட்டு பறக்கத் தொடங்கிடும். இப்பிடி அந்த ஊரில உள்ள எல்லா செல்போனும் பறந்து போற மாதிரி அந்தப் படத்தில காட்டுவினம். இப்ப என்னெண்டால் அதேமாதிரி யாழ்ப்பாணத்திலையும் ஆக்கள் கதைச்சுக் கொண்டு போகேக்க செல்போன் எல்லாம் பறக்கத் தொடங்கியிருக்கு. ஆனால் படத்தில வாற மாதிரி இஞ்சயொண்டும் 'பட்சிராஜன்' வந்து உந்த போனையெல்லாம் பறிச்சுக்கொண்டு போகேலை. எங்கட உள்ளூர் திருடர் திலகங்கள் தான் இப்பிடி சித்து விளையாட்டுக் காட்டுகினமாம்.

முந்தியெண்டால் பஸ்ஸீக்க போகேக்க இல்லாட்டி ஏதும் அலுவலா செல்போனை வைச்சிட்டு பிராக்குப் பாக்கேக்கதான் உப்பிடியான செல்போன்கள் களவு போறது. ஆனால் இப்ப எல்லாச் சனமும் உயிரை விட்டிட்டுப் போனாலும்கூட, செல்போனை விட்டிட்டு அங்கால இஞ்சால அசையமாட்டினம். அதாலதான் இப்ப ஒரு புதுத்தந்திரத்தை செல்போன் கள்ளர்மார் கண்டுபிடிச்சிருக்கினமாம்.

வீட்டில இருக்கேக்க போன் கதைக்கிறதை விடவும் றோட்டில நடந்துபோகேக்கையோ, மோட்டர் சைக்கிளில போகேக்கையோதான் கூடநேரம் எங்கட ஆக்கள் செல்போனில இளிச்சுக் கதைச்சுக் கொண்டு போறவை. இந்த இளிப்பில தங்களைச் சுத்தி என்ன நடக்குது எண்டதையே கவனிக்க அவைக்கு நேரமிருக்காது. இதுதான் செல்போன் கள்ளருக்கு நல்ல வாய்ப்பு. வடிவா எல்லாத்தையும் 'நோட்' பண்ணிப்போட்டு இப்பிடிறோட்டுவழியில செல்போனுக் குள்ள பூந்துபோய் உலகத்தை மறந்திருக்கிற நேர மாப்பாத்து, அந்த போனைப் பிடுங்கிக்கொண்டு ஓடிடுவாங்கள். கையில போன் இருந்தலாவது ஆருக்கும் போன் பண்ணி உதவி கேட்டு, கள்ளனைக் கலைக்கலாம். ஆனால் போனையே பறிச்சால் இப்பத்தை போன்குஞ்சுகள் என்னதான் செய்வினம்? முந்தின ஆக்கள் எண்டால் ஏதும் அசம்பாவிதம் எண்டால் ஊருக்கே கேக்கிற மாதிரிக் கத்துவினம். ஆனால் இப்ப போனுக்குள்ள அனுங்கி அனுங்கிக் கதைச்சு கனபேர் கதைக்கிறது அவைக்கே கேக்கு தில்லை. அந்தளவுக்கு எல்லாரின்ர 'சவுண்ட் ஜசியும்' உக்கிப் போய்க்கிடக்குது. அதால செல்போனைப் பறிச்சுக்கொண்டு போகேக்க ஆரும் பெரிசாக் கத்துற தில்லை.

செல்போனை எடுத்துகொண்டு ஓடினவங்கள் அந்த போனின்ர 'லொக்' உடைக்க முடிஞ்சால் கொழும்புப்பக்கம் எங்கையாவது கொண்டுபோய் வித்துப்போடுவாங்கள். அப்பிடியில்லாட்டி பார்ட்ஸ் பார்ட்ஸா பிரிச்சு, போன் கடையளுக்கு கொஞ்சக் காசுக்கு குடுப்பாங்கள். சிலரின்ர போனுக்குள்ள சில முக்கியமான படங்கள் வீடியோக்கள் இருந்து, அது இந்தமாதிரிக் கள்ளரின்ர கையில கிடைச்சாலும் அவ்வளவுதான். அதைக் காட்டிக் காட்டியே காசைக் கறந்து போடுவாங்கள். அதால இனிமேல் வெளியில நடந்து திரியேக்க, பைக் ஓடேக்கையெல்லாம் கொஞ்சம் அக்கம் பக்கம் என்ன நடக்குது எண்டு அவதானிச்சபடி, செல்போனைத் தொடாமலே போனால் இப்பிடியான செல்போன் கள்ளரிட்ட இருந்து தப்பமுடியும்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா எழுச்சி வெற்றி!



உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது தென்னாபிரிக்கா அணி. இந்தத் தோல்வியை அடுத்து ஆப்கானிஸ்தான் அணி தொடரில் இருந்து வெளியேறியது. எனினும், நல்லபல அடைவுகளுடனும் நேர்த்தியான செயற்பாட்டுடனும்தான் ஆப்கானிஸ்தான் அணி வெளியேறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது. ஓமர்ஷாய் 97 ஓட்டங்களைப் பெற்றார். நூர் அஹமட் 26 ஓட்டங்களையும், ரஹ்மட் ஷா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜெரால்ட் 4 விக்கெட்களையும், இங்கிடி, மகாராஜ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்களை இழந்து இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக வான் டெர் டசன் ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும், பிளுக்வையோ 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நபி, ரஷித் கான் இருவரும் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள்.

இந்தத் தொடரில் எதிர்பாராத வகையில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய அணிகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் அணி உள்ளது. அந்த அணி நான்கு வெற்றிகளைப் பெற்றுள்ளது. இதில் முன்னாள் உலகச் சம்பியன்களான பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து அணிகளையும் ஆப்கானிஸ்தான் வீழ்த்தியுள்ளது. (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 36

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (11.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

இன்றைய ஆட்டம்
பங்களாதேஷ் - அவுஸ்திரேலியா
இடம் புனே
நேரம் மு.ப. 10.30 மணி

இன்றைய ஆட்டம்
பாகிஸ்தான் - இங்கிலாந்து
இடம் கொல்கத்தா
நேரம் பி.ப. 02.00 மணி

ஆப்கானிட வளர்ச்சி அசுர வளர்ச்சி



# இங்கிலாந்தின் வீரர்களை அறைக்குள் பூட்டுங்கள்!

### வசிம் அக்ரம் கலகல



இன்று நடைபெறும் இங்கிலாந்து - பாகிஸ்தான் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை 280க்கும் அதிக ஓட்டங்களால் வென்றால் மட்டுமே பாகிஸ்தான் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறலாம். முதலில் இங்கிலாந்து துடுப்பெடுத்தாடி 300 ஓட்டங்களைக் குவித்தால் பாகிஸ்தான் அணி அதை வெறும் 7 ஓவர்களுக்குள் விரட்டவேண்டும். இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் வசிம் அக்ரம்.

உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற வேண்டுமாயின், பாகிஸ்தான் வீரர்கள் இங்கிலாந்து வீரர்களை அறையொன்றுக்குள் வைத்துப்பூட்டி 'ரைம்அவுட்' செய்யவேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் வசிம் அக்ரம் கிண்டலாகப் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட வேண்டிய அவசியம் இல்லை. ஆட்டம் தொடங்குவதற்கு முன்பே இங்கிலாந்து அணியை அறையில் வைத்துப் பூட்டிவிட்டால் பாகிஸ்தான் கடினமாக உழைக்க வேண்டி இருக்காது - என்றார். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 38 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| ந.அபிப்பிரியன் | - யாழ்ப்பாணம் | ப.சயந்தன் | - சண்டிலிப்பாய் |
| பு.ஜீவேந்திரன் | - வடலியடைப்பு | நி.யேய்ராம் | - மூளாய் மத்தி |
| யோ.சாய்சரன் | - சிறுப்பிட்டி வடக்கு | வி.விபுர்சன் | - நானாட்டான் |
| சி.சுபாங்கி | - கொக்குவில் மேற்கு | அ.கருணாகரன் | - புத்தூர் |
| சி.தியாகேஸ்வரி | - கோப்பாய் தெற்கு | எல்.நித்திலன் | - மல்லாகம் |
| வ.வாக்னேஸ் | - அராலி தெற்கு | ஜே.ஆரணி | - சின்னமடு |
| செ.செல்வராசா | - கோவளம் | எஸ்.விதுர்சன் | - இரணைப்பாலை |
| சா.ஆரணி | - மன்னார் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சபாஷ், சரியான போட்டி!

**2018** ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் **26** ஆம் திகதி அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தன்னிஷ்டப்படி பதவி நீக்கி மஹிந்த ராஜபக்சவை பிரதமராக, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நியமித்தார். ஒக்ரோபர் சதி என்று அடையாளப்படுத்தப்பட்ட அந்த நிகழ்வைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கும் சட்டவாக்கத்துறைக்கும், நிறைவேற்றுத்துறைக்கும் இடையில் நேரடி மோதல் ஏற்பட்டிருந்தது. இந்த மோதல் நீதிமன்றம் வரையில் சென்று தீர்க்கப்படும் நிலைமை தோன்றியிருந்தது. இப்போதும் அதற்கான சூழல் கருக்கட்டத்தொடங்கியிருக்கின்றது.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் மோசமான தோல்வியைச் சாட்டாக வைத்துக்கொண்டு இவ்வளவு காலமும் புகைந்து கொண்டிருந்த அரசியல் மோதல்கள் பட்டவர்த்தனமாகிக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஆளும் தரப்பான பெரமுனவுக்கும் இடையில் தேனிலவு முடிந்து கசக்கத் தொடங்கியிருந்த நிலையில் பெரமுன அமைதிகாத்துக்கொண்டிருந்தது. சந்தர்ப்பம் பார்த்து ரணிலுக்கு இப்போது திருப்பியடித்திருக்கிறது பெரமுன. இந்தத் தாக்குதல் வரவு – செலவுத் திட்டத்துக்கான ஒத்திகை. நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ரணில் கலைத்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு பெரமுன வந்துவிட்டது. அதன் மூலம் ரணிலின் ஜனாதிபதி கனவுக்கு 'செக்'வைக்க முடியும் என்று அந்தக் கட்சி நம்புகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டில் எந்தவொரு தேர்தலும் இல்லை என்ற ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை மொட்டுக் கட்சி இதன் ஊடாக கேள்விக்குட்படுத்தியிருக்கின்றது. இப்போது ரணிலுக்கே இரண்டும் கெட்டான் நிலை.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இலங்கைக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையை கூண்டோடு கலைத்து இடைக்கால நிர்வாக சபையை நிறுவினார். ஜனாதிபதி ரணில் அதற்கு உடன்படவில்லை. அதை மேவி ஒரு குழுவை நியமித்தார். போதாக்குறைக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நீதிமன்றை நாடி இடைக்காலக் குழுவுக்கு எதிராக தடையுத்தரவைப்பெற்றது. உடனடியாகவே நாடாளுமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான், ஜனாதிபதி இடைக்கால சபையை மீளப்பெறுமாறு கூறியமை உட்பட நீதிமன்ற தடையுத்தரவைப் பிறப்பித்த நீதிபதி வரையில் வெளுத்துவாங்கினார். இதுபோதாதென்று ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளனர். இனித்தான் ஆட்டம் ஆரம்பமாகின்றது.

நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதையொட்டி இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினர் பதவி விலகப்போவதில்லை. அவர்கள் அந்தப் பதவியில் தொடர்வார்கள் என்பதை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பலரும் சுட்டிக்காட்டினார்கள். நிறைவேற்று அதிகாரம் உடன்பட்டால் மாத்திரமே அது சாத்தியம் என்பதையும் குறிப்பிட்டார்கள். இதன்போது இடைக்கால சபைக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய நீதிபதி மற்றும் நீதித்துறை தொடர்பிலும் பிய்த்து உதறப்பட்டது.

இப்போது மோதலில் நிறைவேற்று அதிகாரமும், நீதித்துறையும் ஒரு பக்கமாகவும் சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றம் தனி அணியாகவும் நிற்கின்றது. இனிமேல் ஒவ்வொரு விடயங்களையும் நகர்த்தும்போது ஒன்றுக்கொன்று முரண்பாடாக நிற்கின்ற தரப்பினர் யார் பெரியவர்கள் என்பதைக் காண்பிக்க முற்படுவார்கள். 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் சதி முயற்சியிலும் இதுதான் நடந்தது. அப்போது நீதித்துறைக்கு நிறைவேற்று அதிகாரம் கட்டுப்பட்டது. ஆனால், இப்போதைய நிலையில் நீதித்துறைக்கே சவால்விடும் வகையில் நிறைவேற்றதிகாரம் உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் செயற்பட்டது. நிலைமை அதிகாரத் தரப்புகளின் போட்டிக்களமாகியுள்ளது.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



**"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."**

-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)



# மயிலத்தமடுவுக்குச் செல்ல ஊடகக்குழுவுக்கு அனுமதி மறுப்பு

**மட்டக்களப்பு, நவ. 11**

**மயிலத்தமடுக்கு நேரில்சென்று நிலைமைகளை ஆராய்வதற்காகச் சென்ற சிங்கள ஊடகவியலாளர்கள் குழுவை இராணுவம் மற்றும் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.**

மட்டக்களப்பு- மயிலத்தமடுவில் அதிகரித்து வரும் தமிழ் விவசாயிகளுக்கும் சிங்களக் குடியேற்ற குடும்பங்களுக்கும் இடையிலான சிக்கல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர் குழுவொன்று சென்றபோது அங்கு அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் இருந்த இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் அந்தப் பகுதிக்குச் செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை குறித்த ஊடகவியலாளர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

ஒருஊடககுழுவாக, நாங்கள்நிலப்பிரச்சினைகள் குறித்த விவசாயிகளின் அறிக்கையை நேர்காணல் செய்ய மயிலத்தமடுவுக்குச் சென்றோம். மயிலத்தமடு சோதனைச் சாவடியில் பொலிஸார் முற்பகல் 10.10 மணியளவில் எங்களைத் தடுத்து நிறுத்தி அந்த வழியாகச் செல்ல அனுமதிக்க மறுத்துவிட்டனர். ஆனால், மற்றவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதை நாங்கள் பார்த்தோம்.

எங்களைத் தடுப்பதற்கான சட்டபூர்வ அதிகாரத்தையும் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. எங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான சட்டப்பூர்வ அடிப்படையைக்கேட்டு செய்தி அனுப்பினோம், ஆனால் பதில் கிடைக்கவில்லை.

இது பேச்சு சுதந்திரம், கருத்து மற்றும் வெளியீடு, சட்டபூர்வமான தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றுக்கான அரசமைப்பு உரிமைகளை மீறுவதாக நாங்கள் நம்புகிறோம்.

உங்கள் உடனடி கவனம் மற்றும் பதிலளிப்பு மற்றும் பொறுப்பானவர்களைப் பொறுப்பேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். எதிர்காலத்தில் இதுபோன்ற மீறல்கள் தடுக்கப்படுவதை உறுதி செய்யவும்,எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

# அரசமைப்பைப் புறக்கணித்துப் பதவி

## ஜி.எல்.பீரிஸ் காட்டம்

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பை மீறிச் செயற்பட்டுள்ளார். இது பயங்கரமான- பாரதூரமான - தவறான முன்னுதாரணம்.

- இவ்வாறு ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொலிஸ்மா அதிபருக்கு நான்கு தடவைகள் சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் 3 ஆவது மற்றும் 4 ஆவது தடவைகளின்போது சேவைநீடிப்பு வழங்கும்போது அதற்கு அரசமைப்புப் பேரவை அனுமதியளிக்கவில்லை.

உயர் நியமனங்களுக்கு அரசமைப்புப் பேரவையின் அனுமதி அவசியம். இதனை ஜனாதிபதி கருத்திற்கொள்ளவில்லை - என்றார். (ச-44)

**நாளை** 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 26

சுபநேரம் : 09.06 - 10.36
ராகுகாலம் : 04.36 - 06.06
தீபாவளிப்பண்டிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரிமலை ஜனாதிபதி மாளிகை



# தனியார் காணிகளுக்கு இழப்பீடு வழங்கத்தயார்

வடக்கு- கிழக்கின் கல்வித் துறை மற்றும் தொழில் வாய்ப்பு மேம்பாட்டில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் நோக்கோடு 'நொதேர்ன்யுனி' பல்கலைக்கழகத்தை விரிவாக்குவதற்கும் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக கீரிமலையிலுள்ள ஜனாதிபதி மாளிகையைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

நொதேர்ன்யுனியின் முதலீட்டாளர் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட கனடாவாழ் தமிழ் முதலீட்டாளர் இந்திரகுமார் பத்மநாதன். நொதேர்ன்யுனியின் கல்வி பங்காளர்களாக சிலிட்ர் மற்றும் சர்வதேசரீதியான பிரபல பல்கலைக்கழகங்களும் உள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 22ஆயிரத்து 600 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெறுகிறார்கள். இருப்பினும் 4ஆயிரத்து 379 பேர் மட்டுமே பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிறார்கள். ஏனையோர் தகுதி பெற்றும் அவர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத நிலை காணப்படுகிறது. இதைச் சரி செய்யும் நோக்கிலேயே நொதேர்ன்யுனிஉருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்கள் தொழில்நுட்பக் கற்கைகளை கொழும்பு சென்று கற்க வேண்டிய நிலை காணப்பட்டது. தற்போது நான்கு வருட தொழில்நுட்பக் கற்கையை யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். கந்தர்மடத்தில் எமது நொதேர்ன்யுனி சிற்றி கம்பஸை நிறுவியுள்ளோம். எமது பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப் பரிசில்களும், உயர்தரத்தில் அதியுயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு இலவச கற்கையும், அதனோடு மாதாந்தக் கொடுப்பனவு வசதிகளும் வழங்க உள்ளோம். மேலும் யாழ். கல்வி ஆதரவு நிதி ஊடாக குறைந்த மற்றும் வருமானமற்ற குடும்பப் பின்னணியில் உள்ள மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் மூலம் அவர்களின் உயர் கல்வியை எம்மிடம் கற்பதற்கான வாய்ப்பையும் வழங்கவுள்ளோம்.

கந்தர்மடத்திலுள்ள சிற்றி கம்பஸ் 2 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்க மட்டுமே போதுமான வசதியைக் கொண்டிருப்பதால் அதனை விரிவாக்கி 10 ஆயிரம் மாணவர்கள் கல்விகற்கக் கூடிய உயர்ந்த தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடனான பல்கலைக்கழகத்தையும், 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கு வசதியளிக்கும் முகமாக தொழில்நுட்பப் பூங்காவையும் நிறுவுவதற்கான நிலப்பரப்பை பல்வேறு வகையில் ஆராய்ந்தபோது நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம், முன்னாள் ஜனாதிபதியால் அரச காணிகளையும் சில தனியார் காணிகளையும் இணைத்து அதியுயர் வசதிகளுடன் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை பலகாலமாகப் பயன்படுத்தப்படாது காணப்படுவதாகவும், இந்த நிலப்பரப்பை வழங்குமாறு இருவேறு தரப்பினர் அணுகியுள்ளதாகவும் தகவல் அறிந்துகொண்டோம். இதன் பிரகாரம் இந்த மாளிகையை தன்வசமாக்க முயற்சித்தவர்களில் கனடாவைச் சேர்ந்த வர்த்தகர்கள் ஹோட்டல் மற்றும் கசினோ அமைப்பதற்காகவும், இந்திய பொலிஸார் தமது பயிற்சியை நடத்தும் தளமாக்குவதற்காகவும் கோரியிருந்தனர்.

நொதேர்ன்யுனியின் நிறுவுநர் இந்திரகுமார் பத்மநாதன், கண்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தார். இதன்போது எமது நோக்கத்தையும் அதனால் எம்மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படவிருக்கும் விருத்தி குறித்த தாற்பரியத்தையும் எடுத்தியம்பியபோது ஜனாதிபதி கல்வி முயற்சிக்கு இந்த நிலப்பரப்பை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டார். அதனடிப்படையில் துரிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி மாளிகை அமைந்திருக்கும் நிலப்பரப்பளவில் தனியார் காணிகள் சில அமைந்திருக்கிறது என்பதனை நாம் நன்கு அறிவோம். தனியார் காணிகளை நாம் சுவீகரிப்பதாயின் அதற்கான இழப்பீடு செலுத்துவதற்கும் தயாராகவுள்ளோம். இந்த எல்லைப்பரப்புக்குள் அமைந்த காணிகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்தும் பட்சத்தில் ஈடு செய்வதற்கு தீர்மானித்துள்ளோம். இது தொடர்பான விவரங்களுக்கு 0777315262 எனும் இலக்கத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

தமிழ் மக்களின் பிரதேசத்தில் அமைந்த தமிழர்களின் காணிகளில் கல்வி விருத்தி பணிகளுக்கான நடவடிக்கைகள் அன்றி வேறெந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் நோக்கம் எமக்கில்லை. மேலும் குறித்த பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்களைப் பராமரிப்பதிலும், வழிபாடுகள் மேற்கொள்வதிலும் பொதுமக்களுக்கு உறுதுணையாக இருப்போம். நீர் உயர நெல்லுயரும் என்பதற்கிணங்க மாணவர் கல்விக்கு வித்திடும் இப்பணி தமிழர் சமுதாயத்தை உயர்த்தும். ■

---

### அச்சுவேலி மத்திய கல்லூரி

# மாணவர் நாடாளுமன்ற காரசார விவாத அமர்வு

யாழ்ப்பாணம், நவ. 11

அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தின் காரசார விவாத அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.



கல்லூரி சபாநாயகர் ரக்ஷாயினி தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதன்போது மாணவ சமூகத்தில் நிலவும் குறைபாடுகள், அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் சூடான பிரதிவாதங்கள் இடம்பெற்றன. பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன், பாடசாலையின் பொறுப்பாசிரியர்கள் உள்ளிட்டோரும் அமர்வில் கலந்துகொண்டனர். இதேவேளை- இளைஞர் சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி குறைபாடுகளைக் களையும் நோக்கில் பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றங்கள் உருவாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

# நிதி மோசடிக்கு கதவு திறப்பு

### *மத்திய வங்கி உதவி ஆளுநர் குற்றச்சாட்டு*

கொழும்பு, நவ. 11

மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களில் வைப்பிலிடப்படும் பணத்துக்கு மத்திய வங்கி பொறுப்புக்கூறமாட்டாது. சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பு என இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் பட்டியல் மத்திய வங்கி இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பத்திரிகைகளிலும் பிரசுரித்து வருகிறோம். இந்த நிறுவனங்கள் வருடாந்தம் 10-12 சதவீத வட்டியையும் மாதாந்தம் 5-10 சதவீத வட்டியையும் வழங்குகின்றன.

இது எப்படிச் சாத்தியம் என்பதை பணத்தை வைப்பிலிடுபவர்கள் தங்களைத்தாங்களே கேட்க வேண்டும். மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச்செய்தவர்களின் 125 முறைப்பாடுகளை நாங்கள் தற்போது விசாரித்து வருகிறோம். தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களின் கீழ் மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களில் வைப்புச்செய்தவர்களுக்காக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. ஓய்வுபெற்ற சிலர் தமது வட்டிப்பணத்தையே நம்பியிருக்கின்றனர். இவர்களும் இந்த மோசடிக்காரர்களின் வலையில் சிக்குகின்றனர்- என்றார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் வீதித்தடை

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ள கந்தசஷ்டி உற்சவ காலத்தை யொட்டி வீதிகள் தடை செய்யப்படவுள்ளன என்று யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 17 திகதி மற்றும் 19ஆம் திகதி வரை பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணிவரையும் 18ஆம் திகதி சூரன்போர் அன்று நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும் வீதி தடைசெய்யப்படும். மக்கள் மாற்றுப் பாதைகளைக் கடைப் பிடிக்குமாறு மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (ச)


## சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விமனு கோரல்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்விமனு கோரப்பட்டுள்ளது. அதற்கான விண்ணப்பப் படிவத்தினை கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: **2023.11.27**

செயலாளர்.

(CS 26895) A-1


## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 34 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராக கடமைபுரிந்து 11.11.2023 இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திருமதி தேவஜோதி உதயகுமார்**




அவர்கள் தமது ஓய்வுகாலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
தாதியர் நலன்புரி கூட்டுறவு சங்கம்,
யாழ். போதனா வைத்தியாலை,
யாழ்ப்பாணம்.

(CS 26893) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1968



மறைவு 08 . 11 . 2023

### வாமதேவன் சுதாஜினி

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் சுதாயினி அவர்கள் கடந்த (08.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வாமதேவன் அவர்களின் பாசமிகு மனைவியும், சுரேஷன் (லண்டன்), சுரேந்திரன் (லண்டன்), சுதாகரன், சுபாசினி (கனடா), சசீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பாள் (கௌசி), தயாளினி, புஸ்பலதா, சிவதாஸன், பசுபதி, வரதராஜா, காந்தரூபி, ஆகியோரின் மைத்துனியும், நஜனி, கஜனி, வர்சினி, ரம்மியன், துவாரகீசன், ரூபினி, அர்ஜுன் ஆகியோரின் மாமியாரும், யாதவன், யதுனன் ஆகியோரின் பெரியம்மாவும், இரத்தினதுரை - சிறீரஞ்சினி, தர்மகுலசிங்கம் - வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் மருமகளும், சறோஜினிதேவி - குமாரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பெறாமகளும், மாலிகா, சோபிதன், ஜீவிதன், தர்மினி ஆகியோரின் மைத்துனியும், நிவேதனின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைள் நாளை (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

காளி கோவிலடி, அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26894) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 07 - 1928



மறைவு 08 - 11 - 2023

### திருமதி தர்மேஸ்வரி சச்சிதானந்தம்

மலேசியாவை பிறப்பிடமாகவும், வேதாரணியர்வளவு உடுவில் கிழக்கு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தர்மேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் கடந்த (08-11-2023) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சுகிர்தம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் (Retired RMP) அவர்களின் அன்பு மனைவியும், கௌரி (நோர்வே), சக்திகுமார் (கனடா), சுபத்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகுமார் (நோர்வே), தர்மினி (கனடா), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், நீரஜா, தனுஜன், பிரேமித்தா, நர்மிதா, விதுஷா, ஆனந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதி, ஆரியா, சத்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ் சென்றவர்களான ஜெகநாதன், ராமகிருஷ்ணா, விநாயகமூர்த்தி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (13.11.2023) திங்கட்கிழமை காலை 8:30 மணியளவில் காலி வீதி கல்கிசையிலுள்ள மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரிகைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**1/3, NO.9, Spring Court,**
**Peter's lane,**
**Dehiwala.**
**011 272 4484**

தகவல்
குடும்பத்தினர்

(CS 52816) (AK-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 10 . 1961



இறப்பு 09 . 11 . 2023

### திரு.வயிரவிப்பிள்ளை செல்லச்சாமி

உடுத்துறையை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வயிரவிப்பிள்ளை செல்லச்சாமி கடந்த (09.11.2023) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நவரட்ணம் காலஞ்சென்ற புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், நேசவனிதாவின் பாசமிகு கணவரும், ஜீவனா (மானிப்பாய்), ஜீவிதரன் (லண்டன்), ஜசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீத்காந்த் (ஜெயா பேக்கவுஸ் - மானிப்பாய்), அபிஷனா (லண்டன்), தமிழரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுவர்ஷா, மதுஷிகா, கிருத்திக், ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவசாமி, அமரர் தங்கமணி, அமரர் நடராசமணி, அமரர் பொன்னுச்சாமி, அமரர் இராமசாமி, அமரர் துரைச்சாமி, அண்ணாத்துரை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நேசராசா, நேசகுலேந்திரன் மற்றும் நேசரஜனி (லண்டன்), நேசகுமார் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2023) முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பின்னர் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
மகள் ஜீவனா
(076 3714 330)

(CS 26900) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ் திருநெல்வேலியில் இயங்கும் கணக்கியல் நிறுவனத்திற்கு கணக்கியல் உதவியாளர் மற்றும் பயிலுனர்கள் தேவை A\L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோரும் மற்றும் அனுபவமுடையோரும் விண்ணப்பிக்கலாம்.

077 953 0496

## கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



கல்விச் சேவையில் ஆசிரியராக, அதிபராக
35 வருடங்கள் நிறைவுசெய்து மணிவிழா காணும்
எங்கள் மதிப்பிற்குரிய

### திரு.குருசாமி விமலன்
( BEd, MEd, PGDEM,SLPS -1)

விந்தை விமல,
வந்தனை ஓய்வு !
தருகின்றனை பிரிவு
சிந்தனை தூண்ட
மனச் சிறகுகளை விரிக்கின்றோம்!
நின் தன் ஆளுமை கண்டு வியந்தோம்!
கரையே இல்லாக் காட்டாறு நீங்கள்
காலம் வந்து கட்டுப்படுத்த முயல்வது
வேதனை, போங்கள்!

காற்பந்து வீரனாய்த் தொடங்கி
கண்ணியம் மிக்க அதிபர் பதவிவரை
காவியம் படைத்த உங்கள் கதைகள்
நினைவு ஊஞ்சலில் நித்தம் ஆடும்!
சாமரச் சிறகால் மனத்தை வருடி
பிரிவின் துயரை காற்றில்
– கரைக்கிறோம்!
ஓய்வு தேய்வில்லை ஓங்கட்டும் புகழ்!

**சேவை விபரம்:**

**ஆசிரியர்**

- யா/ மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் - 17.08.1988 - 19.01.1992
- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை - 20.01.1992 - 31.12.1993
- யா/ சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் - 01.01.1994 - 12.05.1996
- கிளி / பரந்தன் இந்து மகா வித்தியாலயம் - 13.05.1996 - 29.01.1997
- மு / பாலிநகர் மகா வித்தியாலயம் - 30.01.1997 - 17.02.1999
- யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 18.02.1999 - 15.06.2010

**அதிபர்**

- யா / ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை - 16.06.2010 - 22.09.2010
- யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 23.09.2010 - 11.04.2017
- யா / நடேஸ்வரக் கல்லூரி - 12.04.2017 - 03.11.2023

வாழ்த்துவோர் :
**மணிவிழாக் குழு**

cs 26862) (N.1)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான
## கேள்வி கோரல் - 2024

1. வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2023.11.14 - 2023.11.28 நண்பகல் 12.00 மணி
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** :- 2023.11.29 பி.ப.14.30 மணிவரை
**கேள்வி திறக்கும் திகதி** :- 2023.11.29 பி.ப.14.30 மணி

2. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்
3. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும் அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குனர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரத்தில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.14.00மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 2,500.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாக செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்"** என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப் பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத் தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கமுடியும்.
8. கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் / கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/01/IV/PC/23 | பாதுகாப்பு சேவை | 06 | 02 | 2024.01.01-2024.12.31 |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

11.11.2023 (cr 40982) (N-1)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :- பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் :- துரைச்சாமி ரவிச்சந்திரன் பெண் ஜெயதேவி

சபை ஆதனவரி பதிவேட்டின் படி பெயர் :- சொந்தக்காரர் உ.கோ சங்கரப்பிள்ளை ராசா முகவரி:- ஆதன இல- : 11/4, வீதி : - சுடலை வீதி, வட்டாரம்-: 04

வட்டாரம் 4, சுடலை வீதி, ஆதன இலக்கம் 11/4 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை "வதனாவுடை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 00 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சங்கானை கிழக்கைச் சேர்ந்த மார்க்கண்டு அப்பையா ஆகியவரால் "பிதா வழியால் வந்ததும் நீண்டகால ஆட்சியும் பிசகுதடையற்றதுமாகிய இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே" என வெளிப் படுத்தி சங்கரப்பிள்ளை இராசையாவிற்கு பிரசித்த நொத்தாரிசு கை.சோமசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட 10635ம் இலக்க 14.01.1972ம் திகதிய அறுதி விற்கப் பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 1199ம் இலக்க 27.08.1982ம் திகதிய சீதனஉறுதி மூலம் துரைச்சாமி இராமச்சந்திரன் பெண் நாகேஸ்வரி என்பவருக்கு சீதனமாக வழங்கப்பட்டு அதன் பின் பிரசித்த நொத்தாரிசு சபாபதி வைத்திலிங்கம் சோமசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட 16419ம் இலக்க 22.04.1991ம் திகதிய உறுதி மூலம் கந்தையா முத்துச்சாமி பெண் தவமணிதேவி என்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் அவர்களால் எழுதப்பட்ட 4557ம் இலக்க 01.01.2003ம் திகதிய உறுதி மூலம் கனகரத்தினம் விசயரத்தினத்துக்கும் பெண் சிவவோதி என்பவர்களுக்கு அறுதி விற்கப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் அவர்களால் எழுதப்பட்ட 5444ம் இலக்க 03.12.2003ம் திகதிய உறுதி மூலம் தங்கராசா கணேசலிங்கத்துக்கும் தவமணிதேவி என்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரசித்த நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா அவர்களால் எழுதப்பட்ட 7353ம் இலக்க 13.09.2004ம் திகதிய உறுதி மூலம் கனகரத்தினம் விசயரத்தினம் என்பவருக்கு நிபந்தனைஅறுதி விற்கப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் அவர்களால் எழுதப்பட்ட 9943ம் இலக்க 10.11.2008ம் திகதிய உறுதி மூலம் தங்கராசா கணேசலிங்கத்துக்கும் தவமணிதேவி என்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் அவர்களால் எழுதப்பட்ட 13034ம் இலக்க 28.07.2011ம் திகதிய உறுதி மூலம் செல்லப்பா கனகரத்தினத்திற்கும் பெண் நாகம்மா என்பவர்களுக்கு அறுதி விற்கப்பட்டு பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட 12425ம் இலக்க 26.05.2012ம் திகதிய உறுதி மூலம் நிலப்பரப்பு 1 1/2 இனை திருச்சுதன் பெண் தரிசினி என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளனர். பின்னர் கனகரத்தினத்திற்கும் பெண் நாகம்மா ஆகியவர்களிடம் மீதமாயிருந்த நிலப்பரப்பு 1 1/2 மற்றும் திருச்சுதன் பெண் தரிசினி என்பவர்களின் ஆதனமாகிய நிலப்பரப்பு 1 1/2 ஆகியவற்றை ஒன்றிணைத்து பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா அவர்களால் எழுதப்பட்ட 6933ம் இலக்க 07.01.2015ம் திகதிய உறுதி மூலம் நிலப்பரப்பு 03 குளி 00 இனை துரைச்சாமி ரவிச்சந்திரன் பெண் ஜெயதேவிஎன்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 3188ம் இலக்க 10.01.2023ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "வதனாவுடை" நிலப்பரப்பு 03 குளி 02.5 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - கந்தையா கந்தசாமியின் உரித்தாளரின் ஆதனம்
கிழக்கு - எட்டுமுழ அகலமுள்ள ஒழுங்கை
தெற்கு - செல்லையா இரத்தினத்தின் ஆதனம்
மேற்கு - மார்க்கண்டு பாலசிங்கத்தின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை துரைச்சாமி ரவிச்சந்திரன் பெண் ஜெயதேவி என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சீ.சபேசன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

## ஆதன பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 26, பாச்சு முதலாம் ஒழுங்கை, 30/1. என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தை கொண்ட ஆதனம் மனுவல் பெண் அன்னமுத்து என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் குருநகர், சின்னக்கடை, சென்யேம்ஸ் வீதி இல. 30/1 சவிரியான் மத்தியூஸ் பெண் மேரி றோஸ் அவர்கள் 01.09.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் உறுதி இல. 697 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பேர்த்தியார் திருமதி அன்னமுத்து மனுவலுக்கு சொந்தமாக விருந்து அவர் காலஞ்செல்ல அவரது ஏகவாரிசான தனது தந்தையார் காலஞ்சென்ற மனுவல் செபஸ்தியானுக்கு வந்தடைந்த முதுசமாகும். இவ்வாதனமானது தனது தாயாராலும் சகோதரர்களாலும் நன்கொடையாக முறையான உறுதி மூலமாகவன்றி வாய்ச்சொல் மூலமாக வந்தடைந்து என்றும் எவராலும் பாராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும், தனது தொடர்ச்சியான நீண்ட கால ஆட்சியுடையதுமான ஆதனமாகும் என வெளிப் படுத்துகின்றார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் குருநகர், சின்னக்கடை, சென்யேம்ஸ் வீதி, இல.30/1 சவிரியான் மத்தியூஸ் பெண் மேரி றோஸ் 01.09.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 698 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ராவிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டுக்குளி கோவிற்பற்று குருநகர் இறை "குடியிருப்பு வளவு" சென்யேம்ஸ் மேற்கு வீதியில் வரிமதிப்பு எண் 30/1 கொண்டதும் உத்தரவு பெற்ற அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை 25.11.1986 திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 1156ம் இலக்கப்படத்தின் படி துண்டு 1,3 எனச் சுட்டப்பட்ட பாகங்கள் சேர்த்து குளி (4.69) நான்கு தசம் ஆறு ஒன்பதும் வீடும் மற்றுமதற்குரியவைகளும்.

**இதன் எல்லை.**

கிழக்கு :- குறித்த படத்தில் துண்டு 4 எனச் சுட்டப்பட்ட பாகம்.
வடக்கு :- மார்க்கண்டு தருமுவுக்கும், லோறென்சுவுக்குமுரிய ஆதனம்.
மேற்கு :- குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் சென்யேம்ஸ் மேற்கு வீதியும்
தெற்கு :- செபஸ்தேயு சேவியரின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ரா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு / முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த அதனமானது ஸ்ரனிஸ்லோஸ் அருள்நாயகம் பெண் மேரி குயின்ரா என்னும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்
மாநகர சபை யாழ்ப்பாணம்.

(cr 40976) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரநடுகை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை முன்னிட்டுப் பயன்தரு மரங்கள் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசாலையின் வெளிப்புற வீதியோரத்தில் முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் உலக உணவுத் திட்ட செயற்றிட்டத்தின் கீழ் இந்தச் செயற்பாடு இடம்பெற்றது. கோப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் இணைந்து மரங்கள் நடும் நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். (ஒ-66)



## தனியிசையில் நந்தினி தேசியத்தில் தங்கம்!

கொழும்பு, நவ. 11

அகில இலங்கைத் தமிழ் மொழித் தின தனி இசைப்போட்டியில் தேசியமட்டத்தில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி நந்தினி சுவாமிநாதன் சர்மா தங்கப்பதக்கத்தை தனதாக்கியுள்ளார்.

இவர் பிரபல மிருதங்க வித்துவான் மற்றும் பட்டயக் கணக்காளர் பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மாவின் புதல்வியாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பதுளை நபருக்கு ஒளியூட்டும் சந்நிதி

யாழ்ப்பாணம், நவ. 11

மலையகம் - பதுளைப் பிரதேசத்தைச் சேர்ந்த விபத்தில் பார்வை குன்றிய முஸ்லிம் பிரஜையொருவருக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய மூக்குக்கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கடந்த திங்கட்கிழமை பதுளை சிறுவர் இல்லத்தில் வைத்து கையளித்தார். நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்களும் கலந்துகொண்டனர். (ச-66)



## தென்மராட்சியில் உளநல விருத்தி

சாவகச்சேரி, நவ. 11

தென்மராட்சிப் பிரதே செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினரால் உள நல தினம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் வளவாளராக யாழ்.போதனா மருத்துவமனை உளவளத்துணையா ளர் என்.நவராஜ் பங்கேற்று உளநல விருத்தி தொடர் ன விடயங்கள் தொடர்பில் கருத்துரை வழங்கினார். (ச-9)

## சுண்டுக்குழியில் குருதித்தானம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்.மாவட்டத் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் ஏற்பாட்டில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் சுண்டுக்குழியில் குருதிக்கொடை முகாம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த முகாமில் நைற்றா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பயிலுநர்கள் எனப் பலர் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினர் பங்கேற்று குருதி சேகரிப்பில் ஈடுபட்டதுடன் குருதிக்கொடையாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச-66)

## சந்நிதியான் ஆச்சிரம இன்னிசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.11

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வு வரிசையில் சிறப்பு இன்னிசை விருந்து நிகழ்வு அண்மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மேற்படி ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தைச் சேர்ந்த திருவாசக குயில் லீலாவதி இராசரத்தினம் கலந்து தெய்வீகப் பாடல்களைப் பண்ணுடன் பாடினார்.

தொடர்ந்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான நிழல்பிரதி இயந்திரம் யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பொருளாதார நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவியொருவருக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டியும் வழங்கப்பட்டது. (ச-66)



## மன்னார் கல்வி வலயத்தின் மாணவர்கள் நாடாளுமன்றம்

மன்னார், நவ. 11

மன்னார் கல்வி வலயத்தில் இந்தாண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற அமர்வு கடந்த திங்கட்கிழமை மன்னார் கல்வி வலய மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக சபாநாயகர் மற்றும் பிரதமர் ஆகியோர் வலயக் கல்விப் பணிப்பாளரும் வலய மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான ஜி.டீ. தேவராஜ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

தொடர்ந்து அமைச்சர்கள் நாடாளுமன்ற அமர்வில் மாணவ சமூகத்துக்கு தங்கள் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் குறைபாடுகள் தொடர்பில் சபையில் ஆராய்ந்தனர். இந்த அமர்வில் மன்னார் கல்வி வலயத்திலுள்ள 55 பாடசாலைகளிலிருந்து 110 மாணவர்கள் பங்கேற்றனர். (ச-60)






கோப்பாய் தேசோதய சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கோப்பாய் தேசோதய தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். தேசோதய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ரமணன், கிராம முதியவர்கள், தேசோதய அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு சிறப்புரை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு காலச் சிறப்புரை அரங்க நிகழ்வு கடந்த புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது.
இரண்டாம் மொழி தமிழ் ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
இதில் 'ஜீவநதி' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணிதரன் பங்கேற்று 'ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள்' எனும் பொருளில் சிறப்புரையாற்றினார். (ச-66)




## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**துலாம்:** கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும்.

**விருச்சிகம்** : ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

## தீபாவளியை முன்னிட்டு முத்திரை வெளியீடு

வவுனியா, நவ. 11
தேசியத் தீபாவளிப் பண்டிகையானது வவுனியா மாவட்டத்தில் நாளை 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் ஆகியன இணைந்து முன்னெடுக்கும் இந் நிகழ்வு அன்றையதினம் பி.ப 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
தீபாவளியை முன்னிட்டு முத்திரை வெளியீடும் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஒ-113)


**பெண் வேலையாள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பல் மூக்கு கண்ணாடியகத்திற்கு பெண் உதவியாளர் தேவை. யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் மட்டும் விரும்பத்தக்கவர்கள்.
076 286 9558, 021 222 7893

**காணி விற்பனைக்கு**

யாழ். மணிக்கூட்டு வீதியில் (நீராவியடிப் பிள்ளையார் கோயில் பக்கம்) 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 710 2692


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.04.1937 மறைவு 08.11.2023

**அமரர் சரவணமுத்து சிவலோகநாதன்**

அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

எமது ஆலயத்தின் பஞ்ச கர்த்தா உறுப்பினராகிய **திரு.சிவபாலன்** அவர்களின் அன்புத் தந்தையாரின் இறப்புச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தான நிர்வாக சபையினர் மற்றும் இளைஞர்கழகத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 01 . 1951



மறைவு 10 . 11 . 2023

**இராசலிங்கம் தவமணி**

நீலாவத்தை, வித்தகபுரம், தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் தவமணி நேற்று (10.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், இராமலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், அனுசுயா, பாலமுரளி, பாலஸயந்தன், அனுபாமா ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தூரன், சித்பவி, ராம்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கவி, லக்ஷயன், யதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் குணரத்தினம், இராசமலர், இராசமணி, இராசலட்சுமி காலஞ்சென்ற ஸ்ரீகுகராஜசெல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியை களுக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நீலாவத்தை,
வித்தகபுரம், தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்,
077 956 2637

## மரண அறிவித்தல்



**திருமதி நவமணி சுப்பிரமணியம்**

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நவமணி நேற்று (10.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நாராயணப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா நாகம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை தெய்வானையின் மூத்த மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் விஸ்வையாவின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிமலராஜா (ராயு, பிரான்ஸ்) நாகரஜனி (இலங்கை), முத்துக்குமார் (ரவி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாரஞ்சினி (பிரான்ஸ்), கருணானந்தராஜா (இலங்கை), வனஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரஷாந்-சாருஜா (பிரான்ஸ்), பிரஷன்யா - சிவசங்கர் (நியூசிலாந்து), பிரதீஷா-செந்தூரன் (இலங்கை), விதுஷாந், ஜனுஷாந், டினுஷா (பிரான்ஸ்), மிதுஷா, பத்மிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஸ்ரீநீஷ் (நியூசிலாந்து), சஷ்வின், ஷிரவின் (இலங்கை) ஆகியோரின் ஆசை பூட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனத்திற்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கொழும்பு ஸ்ருடியோ லேன், அச்சுவேலி.
மருமகன் - கருணானந்தராஜா, 0094775554710
மகன் - நிமலராஜா (ராயு) 0033751101917
மகன் - முத்துக்குமார் (ரவி ) 0041792262086

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2024...
தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிகாலம் 2025ஆம் ஆண்டுவரை இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதால் நாடாளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் ஏற்படும் அரசியல் ரீதியிலான தாக்கங்கள் உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே, அவசரமாகப் பொதுத்தேர்தல் நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

பொதுத்தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-44)

## தீபாவளிக்கு...
உள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்படும் பாடசாலைகள் அதற்குப் பதிலாக, எதிர்வரும் சனிக்கிழமை நடத்தப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரியப்படுத்தியுள்ளது. (அ-ம)

## கோப்...
இலங்கைக் கிரிக்கெட் சபைக்குள் நிலவும் ஊழல் மோசடிகள் தொடர்பில் அண்மைக்காலமாக தொடர் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இலங்கை கிரிக்கெட் சபை முற்றாகப் பதவி விலகவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் கோப் குழுவும் இலங்கை கிரிக்கெட் சபையை விசாரணைக்காக அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## அரசியல்கைதிகள்...
கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில், பாகிஸ்தானின் அப்போதைய இலங்கைக்கான தூதுவராக இருந்த பஷீர் அலி முகமட் பயணித்த வாகனத் தொடரணி மீது குண்டு வீசி, அவரைக் கொல்வதற்குச் சதியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் யோகராஜா நிரோஜன், சுப்ரமணியம் சுரேந்திரராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ஆதித்தன் ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்டு 15 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

11 வருடங்களாக கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகள் நிறைவடைந்ததையடுத்து, அரச சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தை நிறைவு செய்ததைத் தொடர்ந்து, கனகரத்தினம் ஆதித்தன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார். 25 குற்றச்சாட்டுகளுடன் எதிரிகளுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் 74 சாட்சிகள் அழைக்கப்பட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளபோதிலும், வழக்கின் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக எந்த விதமான சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

15 வருடங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்தன் ஒரே குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரால் யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கும் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு இருவழக்குமாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட இரு வழக்குகளில் எதிரி விடுதலை செய்யப்பட்ட நிலையில், இந்தவழக்கிலும் எந்தச் சான்றுகளும் முன்வைக்கப்படாத நிலையில், கனகரத்தினம் ஆதித்தனை விடுதலை செய்யும்படியும் தனது சமர்ப்பணத்தை நிறைவு செய்தார். மற்றைய இரண்டு எதிரிகளின் சட்டத்தரணிகளும் தமது சமர்ப்பணத்தை முன்வைத்ததையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி வீரமன் எதிரிகள் மூவரையும் விடுவித்து விடுதலை செய்தார். (அ-ம)

## சிறுமியுடன்...
கடந்த 10ஆம் திகதியன்று பொலிஸாரிடம் சிறுமியைக் காணவில்லை என்று வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சமூக வலைத்தளங்களிலும் அது தொடர்பில் விளம்பரப்படுத்தியிருந்தனர். இந்த நிலையிலேயே வவுனியா நகர், இலுப்பைக்குளம் பகுதியில் இளைஞர் ஒருவருடன் அந்தச் சிறுமி தங்கியிருப்பதை அவதானித்த அயலவர்கள் இது தொடர்பில் கிராம அலுவலருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அந்தச்சிறுமி மீட்கப்பட்டுள்ளார். அவர் பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-18)

## உலக...
இலங்கைக்கு உலக வங்கியால் 150 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் நிதிக்கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்காகவும், நிதித்துறையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவுமே இந்த உதவி வழங்கப்படவுள்ளது. உலக வங்கியின் நிறைவேற்றுச் சபை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி உறுதிப்படுத்தியுள்ளது. (அ-ம)

## மின்வேலியால்...
சம்பவம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நெடுங்கேணி, பட்டிக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த தி.ராதிகன் (வயது-29) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-75)

## சுண்ணக்கல்...
தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், இந்தப் போராட்டங்களின் நூறாவது நாளை முன்னிட்டு இந்தப் பேரெழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாவெளி கிராமஅலுவலர் பிரிவில் ஆயிரத்து 200 ஹெக்ரேயர் அளவில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்வதற்கு நிறுவனமொன்று மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிராக கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், பாலாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப்போராட்டங்களின் நூறாவது நாளை முன்னிட்டு அவர்கள் பெருமளவில் திரண்டு நேற்று ஆர்ப்பாட்டத்தையும், பேரணியையும் முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

எமது பகுதியில் நாளுக்குநாள் சுண்ணல் அகழும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் எங்களின் கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்து பிரதேசங்கள் உவராகி வாழ முடியாத நிலைமை ஏற்படுகின்றது. இதன் விளைவாக நாம் எங்கள் பூர்வீகப் பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சுண்ணக்கல் அகழ்வாலும், அமைக்கப்படவுள்ள சிமெந்துத் தொழிற்சாலையாலும் எங்களின் விவசாய நிலங்கள் கடும் பாதிப்புக்கு உட்படும். இதனால் நாம் விவசாயத்திலிருந்து வெளியேறும் இக்கட்டான நிலைக்கும் தள்ளப்படுவோம். எனவே, மக்களின் போராட்டத்தையும் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு துறைசார் அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கை எடுப்பதுடன், இந்தப் பகுதியில் மண் வளத்தையும், விவசாயத்தின் இருப்பையும் பாதுகாக்க முன்வர வேண்டும் - என்றனர். (அ-ம-214)

## யாழ். மாவட்டச்...
யில் சட்டம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக - யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் வாயிலை முடக்கி மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ அமைப்புகள் பல ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறலால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் அனுதினம் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் தலையீட்டை நிறுத்துமாறு நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற நிலையில், அதற்குமாறாக அந்த மீனவர்களை 'பாஸ்' நடைமுறைமூலம் அனுமதிக்கும் பிற்போக்கான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபடுகின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் தொடர்ச்சியாக, மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் கடற்றொழில் அமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (அ-ம-20)

## சதித்...
தெரிவுக்குழுத் தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியுடன் நாடு திரும்பிய பின்னர் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போட்டியில் தோல்வியடைந்ததற்கு அணிக்கு வெளியே இருந்த சதித்திட்டமே காரணம். இது தொடர்பான அனைத்துத் தகவல்களும் இன்னும் ஓரிரு நாள்களில் வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தான் விளையாடிய 9 ஆட்டங்களில் 7 ஆட்டங்களில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இலங்கை...
வாங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக பல தோல்விகளைச் சந்தித்து வருகின்றது. உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து வெளியேறிய பரிதாப நிலைமையைத் தொடர்ந்து, இடம்பெறவுள்ள சம்பியன் கிண்ணத் தொடரிலிருந்து ஏறக்குறைய தகுதி நீக்கம் செய்யப்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு உலகக்கிண்ணத்தைக் கொண்டுவந்த கிரிக்கெட் அணி இன்று பரிதாப நிலையில் இருப்பதற்கு நிர்வாகிகள், ஊழல் விடயங்கள், எல்லாவற்றுக்கும் மேலாக விளையாட்டில் அரசியல் தலையீடுகள் கொண்டிருக்கும் மேலாதிக்கம் என்பனவே காரணம்.

இலங்கை கிரிக்கெட் அணியை ஒரு முழுமையான அணியாக நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது. இந்தியா மிகப் பெரியதொரு நாடு. பல மாநிலங்களைக் கொண்டது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியில் மத ரீதியான, இன ரீதியான, மாநில ரீதியான வேறுபாடுகள் எல்லாம் கடந்து திறமையானவர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள். உதாரணமாக தற்போது நடக்கும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியில் மிகத் திறமையாக பிரகாசித்துக்கொண்டிருப்பவர்கள் அங்கே சிறுபான்மையினமாக இருக்கின்ற ஓர் இனத்தினுடைய வீரர்களான மொகமட் சிராஜ், மொகமட் ஷமி போன்றவர்களே. அவர்கள் அந்த இந்திய அணியின் வெற்றியில் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். இதேபோன்றதொரு நிலையே இலங்கையிலும் ஏற்படவேண்டும். 'இலங்கை அணி' என்று அடையாளப்படுத்தக்கூடிய வகையில் அனைத்து இனத்தவர்களும் அணிக்குள் உள்வாங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## இலங்கைக்கிரிக்கெட்...
நாள்களாக விவாதம் இடம்பெற்று வருகின்றது. இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய நிர்வாகம் உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, இலங்கை கிரிக்கெட்டுக்குள் அரசியல் தலையீடுகள் நிறைந்திருப்பதாகத் தெரிவித்து இலங்கை கிரிக்கெட் சபையின் உறுப்புரிமையை இடைநிறுத்தியுள்ளது ஐ.சி.சி.

சர்வதேச கிரிக்கெட் சபையின் கட்டுப்பாடுகளை இலங்கை கிரிக்கெட் சபை பாரதூரமாக மீறியுள்ளது என்றும் ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆளுமை விருத்திக்கு மாணவர் நாடாளுமன்றம் களம்

## மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், நவ. 11

ஜனநாயகப் பண்புகளை சரியான முறையில் அறிந்து- ஆராய்ந்து தமக்கு நிலவும் பிரச்சினைகளை தாங்களே இனங்கண்டு தீர்வுக ளைப் பெறுவதற்கு மாணவர் நாடாளுமன்றம் களம் அமைத்துக் கொடுப்பதுடன் மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவப் பாங்கையும் வளர்க்க உந்துசக்தியாக அமைகிறது.

இவ்வாறு இந்த ஆண்டுக்கான மன்னார் கல்வி வலய மாணவர் நாடாளுமன்றம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற பின் ஊடகங்களுக்கு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜி.டீ.தேவராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

மாணவர் நாடாளுமன்ற பிரதான வேலைத்திட்டம் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக நடைபெற்று வருகின்றது.

இந்தச் செயற்றிட்டம் பாடசாலை களில் நிலவும் பிரச்சினைகளைத் தாங்களே இனங்கண்டு தாங்களே ஒரு தலைவராக மாறி அதற்கான தீர்வுகளையும் தெரிவிக்க வழிவகுக்கிறது.

அத்துடன் கூட்டுச் செயற்பாடு, சகவாழ்வு, சகோதரத்துவம், புரிந்து வாழ்தல் ஆகிய வற்றை விருத்தி செய்வதுடன் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழிகோல்கிறது.

இதனூடாக ஜனநாயகப் பண்புகளான வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்துவது, தேர்தல் முடிவுகள் அறிவிக்கும்போது செல்லுபடியற்ற வாக்குகளை இனங்காணல் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளவும் சந்தர்ப்பமாக அமைகின்றது.

மாணவர்கள் மற்றவர்களுக்கு மதிப்பளிப்பது, மற்றவர்கள் கூறும் கருத்துகளை செவிமடுப்பது - இணைந்து செயற்படுவது ஆகியவற்றுக்கும் வழிசமைக்கும் தளமாக மாணவர் நாடாளுமன்றம் அமைகிறது- என்றார்.

(ச-60)


### ICT ஆசிரியர் தேவை

யாழ்.நல்லூர் பகுதியில் O/L கற்கும் ஒருவருக்கு ICT பாடம் வீடுவந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

தொடர்புகளுக்கு:-

074 2292 107

### காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் இருந்து 100 m இல் 8 பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பிற்கு சிறந்த காணி பதிவுகளுக்கு முந்துங்கள்

1 பரப்பு 60 லட்சம்

தொடர்பு : 077 411 8851


# மாமனிதர் ரவிராஜுக்கு நேற்று அஞ்சலி நிகழ்வு

சாவகச்சேரி, நவ. 11

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் நடராசா ரவிராஜின் 17ஆவது நினைவு தின நிகழ்வு சாவகச்சேரியில் உள்ள அன்னாரின் உருவச்சிலை முன்பாக நேற்று இடம்பெற்றது.

மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் ரவிராஜின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-9)






### காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நிலப்பரப்பு, நன்னீரூற்று
* 18 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம்: காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 076 057 0354
077 623 4204
076 755 8606

(CS 26896) A-1


# மருதங்கேணியில் உரிமமற்று இயங்கிய மதுபான நிலையம்

## பரு. பிரதேசசபையால் வழக்குப் பதிவு

யாழ்ப்பாணம், நவ. 11

மருதங்கேணிப் பகுதியில் கடந்த பல வருடங்களாக வியாபார உரிமம் பெறாமல் நடத்தப்பட்டுவந்த மது பானசாலைக்கு எதிராக பருத்தித்துறை பிரதேசசபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மருதங்கேணியில் மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதி களிலும் பாடசாலைகள், ஆலயங்கள் என்பனவற்றுக்கு அருகிலும் அமைக்கப்பட்டுள்ள இந்த மதுபான சாலையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தநிலையில் குறித்த மதுபான சாலை உரிமம் பெறாது நடத்தப்பட்டு வந்தமை கண்டறியப் பட்டதையடுத்து உரிமையாளர் மீது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-159)


### காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-

077 3866 250

(CR 40948) A-1

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்


077 814 7389

077 986 5457

(CS 26820) A-1

### விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட **உழவு இயந்திரத்தில் (Tractor) பொருத்தக் கூடியவாறான சகல விதமான விவசாய கலப்பைகளும்** எம்மிடம் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.





**ஆர்க் என்ரபிறைசஸ்**

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571

Hotline: 071 535 7799 / 071 973 9917




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.